MAKKAL KURAL (Independent National Tamil Daily)

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

சென்னை – 16.5.2024 – வியாழன்
✱ மலர் – 51 ✱ இதழ் – 252

Regd. No. TN/CC(S)DN/122/24-26
RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/24-26



இன்றைய வெயில்
சென்னை – 86 டிகிரி

இன்றைய தங்கம் விலை
சவரன் – ரூ. 54,360

வைகை அணை திறப்பு: 4 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

தேனி, மே 16– வைகை அணையில் நீர் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து 4 மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே 71 அடி உயரம் கொண்ட வைகை அணை உள்ளது. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால் வைகை அணை தனது முழு கொள்ளளவை எட்டியது. பின்னர் நீர்வரத்து சீராக இருந்ததால் அணையின் நீர்மட்டம் 60 அடிக்கு குறையாமல் இருந்தது. இருப்பினும் அவ்வப்போது அணையில் இருந்து குடிநீர் மற்றும் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்படி கடந்த வாரம் அணையின் நீர்மட்டம் 57 அடியாக காணப்பட்டது.

இதற்கிடையே ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாசன கண்மாய்களில் தண்ணீரை பெருக்கும் வகையில் வைகை அணையில் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டது. அதன்படி 15 நாட்களுக்கு 3 கட்டங்களாக தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக ராமநாதபுரம் மாவட்ட தேவைக்காக கடந்த 10ந்தேதி வைகை அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்தநிலையில் அணையில் இருந்து ராமநாதபுரம் மாவட்ட தேவைக்காக கடந்த 5 நாட்களாக திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று காலை நிறுத்தப்பட்டது.

இன்று காலை முதல் சிவகங்கை மாவட்ட தேவைக்காக வைகை அணையில் இருந்து வினாடிக்கு 1,500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்து இருந்தனர். அதன்படி அணையில் இருந்து இரண்டாம் கட்டமாக சிவகங்கை மாவட்ட தேவைக்காக வினாடிக்கு 1,500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இன்று முதல் வருகிற 19ந்தேதி வரை 4 நாட்களுக்கு தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 3ம் கட்டமாக மதுரை மாவட்ட தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட உள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் 50 அடியாக உள்ளது.

அணைக்கு நீர்வரத்து இல்லாத நிலையில், தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவதன் காரணமாக ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால், 4 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட மக்கள் ஆற்றில் குளிக்கவோ, இறங்கவோ வேண்டாம் என பொதுப்பணித்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பா.ஜ.க. 220 தொகுதிகளுக்கு குறைவாகவே வெற்றி பெறும்: அரவிந்த் கெஜ்ரிவால் கணிப்பு

லக்னோ,மே 16– பாரதீய ஜனதா 220 தொகுதிகளுக்கு குறைவாகவே வெற்றி பெறும் என அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்தார்.

லக்னோவில் சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் மற்றும் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஆகிய இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது கெஜ்ரிவால் கூறியதாவது:–

இந்தியா கூட்டணி கட்சிகளுக்கு ஓட்டளிக்குமாறு, உத்தரபிரதேச மக்களை கேட்டு கொள்கிறேன்.

நான்கு கட்ட ஓட்டுப்பதிவிற்கு பிறகு பாரதீய ஜனதா மிகப்பெரிய தோல்வியை சந்தித்துள்ளது. பாரதீய ஜனதா 220 தொகுதிகளுக்கு குறைவாகவே வெற்றி பெறும். அரியானா, டெல்லி, பஞ்சாப், கர்நாடகா, மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் அதிக தொகுதிகளில் பாரதீய ஜனதா தோல்வி அடையும். பாரதீய ஜனதா மீண்டும் ஆட்சி அமைக்காது. இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும்.

4 முக்கிய தலைப்புகளின் கீழ் பேசவுள்ளேன். முதலாவது, இந்த தேர்தலில் அமித்ஷாவுக்காக மோடி வாக்கு சேகரிப்பது. அடுத்தாண்டு செப்டம்பர் 17ம் தேதியுடன் பிரதமர் மோடிக்கு 75 வயதாகிவிடும். அதன்பிறகு நாட்டின் பிரதமராக அமித்ஷாவுக்கு வழிவிட மோடி முடிவெடுத்துள்ளார். அமித்ஷாவுக்கு தடையாக இருக்கக்கூடிய அனைத்து பெரிய தலைவர்களும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

2வது யோகி ஆதித்யநாத் இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளார். 3வது அரசியல் அமைப்பை பாஜக மாற்றி எஸ்சி, எஸ்டி பிரிவுக்கான இடஒதுக்கீட்டை ரத்து செய்ய முயற்சிப்பது. நான்காவது, ஜூன் 4ம் தேதி இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வருவது.

மணிப்பூரில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. அப்போது பிரதமர் மோடி அமைதியாக இருந்தார். பிரஜ்வல் ரேவண்ணா ஆயிரக்கணக்கான பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தார். ஆனால் பிரதமர் மோடி பிரஜ்வல் ரேவண்ணாவுக்கு ஓட்டு சேகரித்தார்.

டெல்லி ஜந்தர் மந்தரில் மல்யுத்த வீரர்கள் போராட்டம் நடத்திய போது, ஸ்வாதி மாலிவால் போலீசாரால் தாக்கப்பட்டார். அப்போது பிரதமர் மோடி எந்த கருத்தும் தெரிவிக்காமல் மவுனம் காத்தார். இவ்வாறு அவர் கூறினார்.

'அபராதம் விதிக்கும் நிலை, அங்கீகாரம் ரத்தாகும் நிலைக்கு மருத்துவக் கல்லூரிகளைத் தள்ளுவதா?' தி.மு.க. அரசுக்கு ஓ.பி.எஸ். கடும் கண்டனம்

சென்னை, மே 16– அபராதம் கட்டும் அளவுக்கு தமிழ்நாட்டில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் குறைபாடுகளை ஏற்படுத்தி உள்ள தி.மு.க. அரசிற்கு ஓ. பன்னீர்செல்வம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் 2 மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. மருத்துவத்திற்கென தனிப் பல்கலைக்கழகம் அமைத்த பெருமையும் எம்.ஜி.ஆருக்கு உண்டு. இதனைத் தொடர்ந்து, அம்மாவின் ஆட்சிக் காலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகள் துவங்கப்பட்டன. அம்மாவின் வழிகாட்டுதலோடு நடைபெற்ற அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மேலும் 2 மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, பிரதமரின் தலைமையிலான மத்திய அரசு, ஒரே ஆண்டில் தமிழ்நாட்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை தொடங்க அனுமதித்தது. இதன் காரணமாக, அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெற்றனர். இந்த மருத்துவக் கல்லூரிகளை பராமரிக்கக்கூட முடியாத திறமையற்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருப்பது வருத்தமளிக்கும் செயல் ஆகும்.

மருத்துவக் கல்லூரிகள்தான் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அதிக அளவில் துவக்கப்படவில்லை. துவங்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளில் குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளக்கூட தி.மு.க. அரசால் முடியவில்லை. 2023–ம் ஆண்டு, பயோமெட்ரிக் வருகை இல்லாதது, புகைப்படக் கருவிகள் சரியாக இயங்காதது போன்ற காரணங்களினால் மருத்துவக் கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்தாகும் அளவுக்கு நிலைமை இருந்தது. இந்தக் குறைபாடுகள் இந்த ஆண்டிலும் தொடர்கின்றன. செயலற்ற ஆட்சி என்பதற்கு இதைவிட ஓர் எடுத்துக்காட்டு தேவையில்லை.

கடந்த 3 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் பற்றாக்குறை என்று அனைவரும் கூறி வந்ததை நிரூபிக்கும் வகையில், தமிழ்நாட்டு மருத்துவக் கல்லூரிகளில் பேராசிரியர் நியமனங்களில் உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி, தர்மபுரி, ராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள பல மருத்துவக் கல்லூரிகளுக்கு 3 லட்சம் ரூபாய் அபராதத்தை தேசிய மருத்துவ ஆணையம் விதித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்லூரி வளாகங்களில் 75 விழுக்காட்டிற்கும் குறைவாக மருத்துவப் பேராசிரியர்கள் இல்லை என்றால் விளக்கம் கேட்டு அறிவிப்புகள் பெறப்படும் என்றும், இதன் அடிப்படையில், தேசிய மருத்துவ ஆணையத்திடமிருந்து அறிவிப்புகள் பெறப்பட்டுள்ளன என்றும், தேர்வுப் பணி, ஆய்வுப் பணி போன்ற காரணங்களால் பயோமெட்ரிக் வருகைப் பதிவேட்டில் மருத்துவப் பேராசிரியர்கள் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டாலும், அதனை தேசிய மருத்துவ ஆணையம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் கூறி இருக்கிறார்.

2 முறை நோட்டீஸ்

அதே சமயத்தில், இதுபோன்ற அபராதம் விதிக்கப்படுவதற்கு முன்பு தொடர்புடைய மருத்துவக் கல்லூரிகளுக்கு 2 முறை விளக்கம் கேட்டு அறிவிப்புகள் அனுப்பப்படும் என்றும், விளக்கங்கள் திருப்தி அளிக்காத பட்சத்தில், கல்லூரி நிர்வாகத்தினருக்கு நேரில் வந்து விளக்கம் அளிக்க வாய்ப்பு அளிக்கப்படும் என்றும், அதற்கு பின்பே அபராதம் விதிக்கப்படும் என்றும் தேசிய மருத்துவ ஆணையத்தின் மருத்துவக் கல்வி வாரியத் தலைவர் தெரிவித்து உள்ளார். தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநரின் கூற்றையும், தேசிய மருத்துவ ஆணைய அதிகாரியின் கூற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முறையான, நியாயமான விளக்கம் தமிழ்நாடு அரசின் சார்பில் தேசிய மருத்துவ ஆணையத்திற்கு அளிக்கப்படவில்லை என்பதும், போதுமான மருத்துவர்கள் நியமிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இதன் விளைவாக மருத்துவ மாணவ, மாணவியரின் கல்வி பாதிக்கப்பட்டு இருக்கிறது.

மாணவ, மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி, தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிகளுக்கேற்ப தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளில் காலியாக உள்ள மருத்துவ ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்பவும், இனி வருங்காலங்களில், அங்கீகாரம் ரத்தாகும் நிலை, அபராதம் விதிக்கும் நிலை போன்றவற்றிற்கு மருத்துவக் கல்லூரிகள் தள்ளப்படாது இருப்பதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

BINNY LIMITED

CIN : L17111TN1969PLC005736
Regd. Office: No.1, Cooks Road, Perambur, Chennai 600 012. Website : www.binnyltd.in; email : binny@binnyltd.in; T : 044 - 2662 1053; F : 044 - 2662 1056

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTH ENDED 31ST DECEMBER 2023

(Rs. in Lakhs)

	Particulars	Quarter ended			Year ended
		31.12.2023	30.09.2023	30.06.2023	31.03.2023
		Unaudited	Unaudited	Unaudited	Audited
1.	Total income from operations (net)	2,391.31	6,103.48	5,144.62	15,441.17
2.	Net Profit / (Loss) for the Period (before Tax, Exceptional and / or Extraordinary items)	-139.23	3,908.98	3,210.78	9,855.59
3.	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary items)	-139.23	3,908.98	3,210.78	9,855.59
4.	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary items)	-573.14	1,871.62	1,955.89	5,938.09
5.	Total Comprehensive Income for the period {Comprising Profit / (loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)}	-347.21	2,168.17	2,468.35	7,382.88
6.	Equity Share Capital	1,115.97	1,115.97	1,115.97	1,115.97
7.	Reserves (excluding Revaluation Reserve)				
8.	Earnings Per Share (of Rs. 5/- each) (for continuing and discontinued operations) (Not Annualised)				
	(a) Basic (Rs.)	-2.57	8.39	8.76	26.61
	(b) Diluted (Rs.)	-2.57	8.39	8.76	26.61

Notes :

1. The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the Company's Website (www.binnyltd.in) and Stock Exchange's website (www.bseindia.com).
2. The above extract has been prepared in accordance with the Companies (Indan Accounting standards) Rules, 2015 (IND AS) prescribed under section 133 of the Companies Act, 2013 read with Companies (Indian Accounting Standards) Rules, 2015 (as amended).

For BINNY LIMITED

Place : Chennai
Date : 14.05.2024

M Nandagopal
Managing Director & Executive Chairman

ரெடிங்டன் லிமிடெட் (முன்பு ரெடிங்டன் (இந்தியா) லிமிடெட் என அழைக்கப்பட்டது)

Redington
SEAMLESS PARTNERSHIPS

பதிவு அலுவலகம் : பிளாக் 3, பிளத்தின், ரெடிங்டன் டவர், உள்வட்ட சாலை, மேற்கு சரஸ்வதி நகர், 4வது தெரு, புழுதிவாக்கம், சென்னை 600 091
வலைதளம்: www.redingtongroup.com | மின்-அஞ்சல்: investors@redingtongroup.com
CIN: L52599TN1961PLCO28758
போர்டு எண்: +91-44-42243363

மார்ச் 31, 2024 - உடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் அறிக்கை

ரூ. கோடிகளில்

வ. எண்	விவரங்கள்	ஒருங்கிணைந்தவை			
		முடிந்த காலாண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த ஆண்டு	முடிந்த ஆண்டு
		மார்ச் 31, 2024	மார்ச் 31, 2023	மார்ச் 31, 2024	மார்ச் 31, 2023
		தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் இருந்து மொத்த வருமானம்	22,433.41	21,848.59	89,345.71	79,376.78
2.	வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு முன் லாபம்	380.54	454.69	1,574.65	1,833.47
3.	வரிக்கு முன் லாபம்	380.54	454.69	1,574.65	1,833.47
4.	வரி மற்றும் விதிவிலக்கங்களுக்கு பின் லாபம்	323.89	328.39	1,238.61	1,439.39
5.	விரிவான மொத்த வருவாய்	305.23	303.21	1,133.74	1,683.58
6.	பங்கு மூலதன மதிப்பு	156.35	156.31	156.35	156.31
7.	இருப்புகள் மற்றும் உபரி (கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு தவிர மற்ற பங்கு)	7,216.25	6,596.25	7,216.25	6,596.25
8.	கடனீட்டுப் பத்திரங்களின் பிரீமியம் கணக்கு	176.12	174.79	176.12	174.79
9.	மொத்த நிதி சொத்துக்கள்	7,548.72	6,927.35	7,548.72	6,927.35
10.	கட்டுப்படுத்தாத வட்டி	313.23	365.82	313.23	365.82
11.	நிலுவையில் உள்ள கடன்	2,806.96	3,127.37	2,806.96	3,127.37
12.	கடன்-பங்கு விகிதம்	0.36	0.43	0.36	0.43
13.	ஒரு பங்கு வருமானம் (முக மதிப்பு தலா ரூ.2/-) (முடிந்த காலண்டுக்கான நிலையில் அல்லாத மதிப்பு)				
	அ. அடிப்படை (ரூ.)	4.16	3.97	15.59	17.82
	ஆ. இளகியது (ரூ.)	4.16	3.97	15.59	17.81
14.	கடன் சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை)	4.05	4.03	5.02	6.46
15.	வட்டி சேவை கணக்கீடு விகிதம் (நேரங்களில்) (ஆண்டு நிர்ணயம் செய்யப்படவில்லை)	4.58	5.94	5.09	7.74

குறிப்புக்கள்

1. நிறுவனத்தின் தனிநிலை நிதி முடிவுகளின் சாராம்சம்

ரூ. கோடிகளில்

வ. எண்	விவரங்கள்	தனிநிலை			
		முடிந்த காலாண்டு	முடிந்த காலாண்டு	முடிந்த ஆண்டு	முடிந்த ஆண்டு
		மார்ச் 31, 2024	மார்ச் 31, 2023	மார்ச் 31, 2024	மார்ச் 31, 2023
		தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்பட்டது
1.	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய்	10,490.24	9,711.66	41,227.60	35,341.44
2.	வரிக்கு முன் லாபம்	216.71	171.99	1,303.29	1,276.20
3.	வரிக்கு பின் லாபம்	160.57	124.91	1,081.24	1,071.88

2. மேற்கண்ட சுருக்க நிதிநிலை அறிக்கை, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரிய (பட்டியலிடுதலுக்கான கடமைகள் மற்றும் பிற வெளியீடுகளுக்கான தேவைகள்) நெறிமுறைகள் 2015, விதி எண் 33ன் படி, பங்குச் சந்தைகளில் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான காலாண்டு / அரையாண்டு / ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள் பற்றிய அறிக்கையின் சுருக்கமாகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பான முழு அறிக்கை, இந்திய தேசிய பங்கு சந்தை www.nseindia.com மற்றும் மும்பை பங்குசந்தை www.bseindia.com ஆகியவற்றின் இணைய தளங்களிலும், நிறுவனத்தின் www.redingtongroup.com என்ற இணைய தளத்திலும் உள்ளன.
3. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, நிறுவன இயக்குநர்கள் குழும கூட்டத்தில் மே 15, 2024 ஒப்புதல் வழங்கப்பட்டது.

இடம் : சென்னை
தேதி : மே 15, 2024

ரெடிங்டன் லிமிடெட் சார்பில்
எஸ் வி கிருஷ்ணன்
நிதி இயக்குநர் (முழுநேரம்)

படிவம் எண்.CAA.2
(பிரிவு 230(3) மற்றும் விதி 6 மற்றும் 7–ன் கீழ்)
CP(CAA)/22(CHE)/2024
IN
CA(CAA)/67(CHE)/2023

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் தொடர்பான விஷயத்தில்
மற்றும்
அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டை (''மாற்றப்படும் நிறுவனம்'')
அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (''மாற்றிக்கொள்ளும் நிறுவனம்'') உடன் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களை ஒருங்கிணைக்கும் திட்டம் தொடர்பான விஷயத்தில்
அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
எண். 44/38, வீரபத்திரன் தெரு, முதல் தளம், நுங்கம்பாக்கம், சென்னை – 600 034
...இரண்டாவது விண்ணப்பதாரர்/மாற்றிக்கொள்ளும் நிறுவனம்

மனு குறித்த அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவுகள் 230 முதல் 232 வரையின் கீழ், அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டை (''மாற்றப்படும் நிறுவனம்'') அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (''மாற்றிக்கொள்ளும் நிறுவனம்'') உடன் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுடன் ஒருங்கிணைக்கும் திட்டம் ('திட்டம்') குறித்து கூட்டு விண்ணப்பம் ஒன்று ஏப்ரல் 24, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அது மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மனு மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், பிரிவு அமர்வு (நீதிமன்றம் – I), சென்னை முன்பு ஜூன் 19, 2024 அன்று விசாரணைக்கு வருகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து யாரேனும் எதிர்ப்பதாக இருப்பின் அது குறித்து அவர்கள் மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு, அதற்கான காரணத்தை அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ கையொப்பமிட்டு அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, திரு. I B ஹரிகிருஷ்ணா, முதல் தளம், எண்.44/38, வீரபத்ரன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034, தமிழ்நாடு அவர்களுக்கு இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான தேதியில் இருந்து முப்பது நாட்களுக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். இந்த விண்ணப்பம் குறித்து எதிர்ப்பதாக இருப்பின், எதிர்ப்பதற்கான காரணம் அல்லது பிரமாணப் பத்திர நகலையும் இணைத்து அது போன்ற அறிவிப்பை அனுப்ப வேண்டும். யாருக்காவது மனுவின் நகல் தேவைப்படின் அவர்கள் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
திரு. ஸ்ரீகாந்த் ஸ்ரீனிவாசன்
இயக்குனர்

மே 16, 2024 அன்று தேதியிடப்பட்டது
இடம் : சென்னை

படிவம் எண்.CAA.2
(பிரிவு 230(3) மற்றும் விதி 6 மற்றும் 7–ன் கீழ்)
CP(CAA)/22(CHE)/2024
IN
CA(CAA)/67(CHE)/2023

நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் தொடர்பான விஷயத்தில்
மற்றும்
அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டை (''மாற்றப்படும் நிறுவனம்'')
அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (''மாற்றிக்கொள்ளும் நிறுவனம்'') உடன் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களை ஒருங்கிணைக்கும் திட்டம் தொடர்பான விஷயத்தில்
அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
எண். 44/38, வீரபத்திரன் தெரு, முதல் தளம், நுங்கம்பாக்கம், சென்னை – 600 034,
...முதல் விண்ணப்பதாரர்/மாற்றப்படும் நிறுவனம்

மனு குறித்த அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவுகள் 230 முதல் 232 வரையின் கீழ், அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டை (''மாற்றப்படும் நிறுவனம்'') அஷ்யூரன்ட் வாரண்டி சொல்யூஷன்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் (''மாற்றிக்கொள்ளும் நிறுவனம்'') உடன் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்கியவர்களுடன் ஒருங்கிணைக்கும் திட்டம் ('திட்டம்') குறித்து கூட்டு விண்ணப்பம் ஒன்று ஏப்ரல் 24, 2024 அன்று தாக்கல் செய்யப்பட்டு, அது மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த மனு மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், பிரிவு அமர்வு (நீதிமன்றம் – I), சென்னை முன்பு ஜூன் 19, 2024 அன்று விசாரணைக்கு வருகிறது.

உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்து யாரேனும் எதிர்ப்பதாக இருப்பின் அது குறித்து அவர்கள் மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு, அதற்கான காரணத்தை அவரோ அல்லது அவரது வழக்கறிஞரோ கையொப்பமிட்டு அவரது பெயர் மற்றும் முகவரியுடன் மனுதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி, திரு. I B ஹரிகிருஷ்ணா, முதல் தளம், எண்.44/38, வீரபத்ரன் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034, தமிழ்நாடு அவர்களுக்கு இந்த அறிவிப்பு விளம்பரம் வெளியான தேதியில் இருந்து முப்பது நாட்களுக்குள் வந்து சேருமாறு அனுப்பி வைக்க வேண்டும். இந்த விண்ணப்பம் குறித்து எதிர்ப்பதாக இருப்பின், எதிர்ப்பதற்கான காரணம் அல்லது பிரமாணப் பத்திர நகலையும் இணைத்து அது போன்ற அறிவிப்பை அனுப்ப வேண்டும். யாருக்காவது மனுவின் நகல் தேவைப்படின் அவர்கள் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

அஷ்யூரன்ட் ஆட்டோமோட்டிவ் வாரண்டி சொல்யூஷன்ஸ்
(இந்தியா) பிரைவேட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
திரு. ஸ்ரீதர் கருணாகரன்
இயக்குனர்

மே 16, 2024 அன்று தேதியிடப்பட்டது
இடம் : சென்னை